1974 மார்ச் 6]

கிராம அதிகாரிகள்

* 305 வினா.—திரு. என். கிட்டப்பா :

புலவர் சி. பழனிச்சாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராம உத்தியோகஸ்தர் பதவிகளை முழு நேர ஊழியப் பதவிகளாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தமிழ்நாடு மாநில நிர்வாகச் சீர்திருத்த ஆணைக் குழு மாவட்ட வருவாய்-பொது நிர்வாகம் குறித்த தனது அறிக்கையில் தற்போதுள்ள பகுதி நேரக் கிராம அதிகாரிகளுக்குப் பதிலாக மாற்றலுக்குட்பட்ட முறையான முழு நேர அரசுப் பணியாளர்கள் வருவாய்த் துறையின் அங்கமாக நியமிக்கப்பட வேண்டுமெனப் பரிந்துரை செய்துள்ளது. மாநில நிர்வாகச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பரிந்துரையை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

புலவர் சி. பழனிச்சாமி: தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற கிராம உத்தியோகஸ்தர்கள் கிராமத்திலிருக்கிற ஏழை எளியவர்களுக்கு, உழவர் பெருமக்களுக்கு நல்ல முறையில் ஒத்துழைப்புத் தர மறுக்கிறார்கள். ஆகவே, நிர்வாகச் சீர்திருத்தக் குழு பரித்துரை செய்ததைப் போல, அவர்களை மாற்றி பட்டதாரிகளை நியமித்து நல்ல ஊதியம் கொடுத்து, முழு நேர ஊழியர்களாக்கும் நடவடிக்கையை கொஞ்சம் விரைவாகச் செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கனவே சொன்னதைப் போல, அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே, நம் அரசால் போடப்படுகின்ற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுகின்றவர் கிராம உத்தியோகஸ்தர்கள். அவர்களது நீண்ட நாளைய கோரிக்கை சம்பள உயர்வு வேண்டுமென்பது. அதனை நிறைவேற்ற

ஏன் இவ்வளவு தயக்கம் காட்ட வேண்டும்? இனிமேலாவது அரசு அவர்களது கோரிக்கையை கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது சம்பளப் பிரச்னை அல்ல, பகுதி நேர ஊழியர்களை முழு நேர ஊழியர்களாகவும், மாற்றலுக்குட்பட்டவர்களாகவும் செய்ய வேண்டும் என்று அந்த ஆணைக்குழு பரிந்துரை செய்திருக்கிறது. அதை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. க. நாகராஜன்: இந்த கிராம உத்தியோகஸ்தர்களை சொந்த ஊர்களிலே பணிபுரியவிடாமல், வேறு ஊர்களுக்கு மாற்றப்படுகிறவர்களாகவும் ஆக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுதான் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

Mettupalayam as taluk

* 306 Q.—THIRU M. C. THOOYAMANI: Will the Hon. the Minister for Revenue be pleased to state the action taken by the Government to upgrade Mettupalayam as a main taluk?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மேட்டுப்பாளையம் நகரை தலைமை வட்டமாக மாற்றும் செயற்குறிப்பு தற்போது எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. மே. சி. தூயமணி: பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் அவனுசி வட்டத்திலே மிகப் பெரிய நகரமாகும். அதைத் தலைமை நகரமாக மாற்ற வேண்டுமென்று பல்லாண்டு காலமாகக் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. எனவே இந்த ஆண்டாவது, அதனை தலைமை நகரமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பல்லாண்டு காலமாகப் பரிசீலித்துத்தான், 1972-ல் அது சப்-தாலுக்காவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்பொழுது, வருவாய்த் துறை வாரியத்தின் மூலமாகவோ, மாவட்ட ஆட்சித் தலைவராலோ, அப் பகுதியை வட்டாரமாக உயர்த்த வேண்டுமென்று பரிந்துரை அனுப்பப்படவில்லை.